சார்பு நீதிமன்றம் மேட்டுப்பாளையம்

அசல் வழக்கு எண்.127/2022

2023 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 20 ம் நாள் வா.சா.2 என்பவரது சாட்சிய வாக்குமூலம் (1873 ம் ஆண்டு 10 ஆவது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.சபரீசன், பென்ச் கிளார்க், என்பவரால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | பொன்னுசாமி | வயது | 47 |
| க/பெ | முருகன் | வட்டம் | மேட்டுபாளையம் |
| விலாசம் | சிட்டேபாளையம் | மாவட்டம் | கோயமுத்தூர் |
| | | தொழில் | தனியார் நிறுவன ஊழியர் |

<u>முதல் விசாரணை:</u>

நான் வாதியின் அதிகாரம் பெற்ற முகவர். எனது முதல் விசாரணையை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதனை ஏற்றுக் கொள்ளும் படி பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன். அதில் உள்ள கையெழுத்துக்கள் என்னுடையது தான். பிராது படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

| *வ. எண்.* | *தேதி* | *ஆவண விபரம்* | *ஆவணத்தின் தன்மை* | *ஆவண வரிசை* |
|---|---|---|---|---|
| 1 | | கிரயப்பத்திரம் | சான்றிட்ட நகல் | வா.சா.ஆ.1 |
| 2 | | இறப்புச் சான்று | ஜெராக்ஸ் நகல் | வா.சா.ஆ.2 |
| 3 | | கிரையப்பத்திரம் | சான்றிட்ட நகல் | வா.சா.ஆ.3 |
| 4 | | வழக்கறிஞர் அறிவிப்பு | அலுவலக நகல் | வா.சா.ஆ.4 |
| 5 | | அஞ்சல் ஒப்புகை அட்டை 3 எண்ணம் | அசல் | வா.சா.ஆ.5 |
| 6 | | திரும்பிய அஞ்சலுறைகள் 11 எண்ணம் | அசல் | வா.சா.ஆ.6 |

**3 முதல் 13, 15 பிரதிவாதிகளால் ஏற்றுக்கொள்ளப்பட்டு 2ம்பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**

இந்த வழக்கை பற்றிய விவரங்கள் எனக்கு நன்கு தெரியும். இந்த வழக்கை யார் யார் மீது போட்டார்கள் என்றால் ஜான்பாண்டியன் என்பவர் முருகன் மற்றும் ஆறுமுகம் மற்றும் 17 மீது தாக்கல் செய்து உள்ளார். எனது அப்பா எந்த முகவரியில் குடியிருக்கிறார் என்றால் க.எண்.3/128, சிட்டேபாளையம், பெரியதோட்டம் பாளையம் புதூர், இரும்போறை கிராமம், என்ற முகவரியில் குடியிருக்கிறார். வாதியியும் 1ம் பிரதிவாதியும் உடன் பிறந்த சகோதரர்கள் என்றால் சரி தான். 1ம் பிரதிவாதி தான் எனது தகப்பனார் என்றால் சரி தான். என்னுடைய நிரூபண வாக்கு மூலத்தில் 1ம் பிரதிவாதி என்னுடைய தகப்பனார் என கூறவில்லை என்றால் எனது அப்பாவிற்கு எனக்கும் பேச்சு வார்த்தை இல்லை நான் தனியாக இருக்கிறேன். நான் எனது சித்தப்பாவிற்காக சாட்சியம் அளிக்கிறேன். நான் சிட்டேப்பாளையத்தில் க.எண்.3/128 பி என்ற முகவரியில் குடியிருக்கிறேன். நான் தற்போது 4/444, பாரதி நகர், சின்னபொம்மநாயக்கன்பாளையம், திருப்பூர் என்ற முகவரியில் குடியிருக்கிறேன். என்னுடைய நிரூபண வாக்கு மூலத்தில் என்னுடைய தகப்பனார் குடியிருக்கும் முகவரியில் தான் நான் குடியிருப்பதாக காட்டியுள்ளேன் என்றால் அந்த கதவு எண்ணில் 3 வீடுகள் உள்ளது. அதில் 1 வீட்டில் நான் குடியிருக்கிறேன். என்னுடைய நிரூபண வாக்கு மூலத்தில் 3 வீடுகள் இருப்பதாக கூறவில்லை என்றால் சரி தான். நான் திருப்பூரில் குடியிருப்பதாகவும் என்னுடைய நிரூபண வாக்கு மூலத்தில் கூறவில்லை என்றால் சரி தான். என்னுடைய நிரூபண வாக்கு மூலத்தில் எனக்கும் எனது தகப்பனாருக்கும் பேச்சு வார்த்தை இல்லை என்று குறிப்பிடவில்லை என்றால் சரி தான். வாதி இந்த வழக்கில் சாட்சியம் அளித்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. ஆனால் இந்த வழக்கை பற்றி என்னிடம் கூறியுள்ளார். நான் ITI படித்துள்ளேன். எனது சித்தப்பாவிற்கு எழுத படிக்க தெரியாது. அவர் கை ரேகை தான் வைப்பார் என்றால் சரி தான். பொது அதிகார ஆவணம் ஆங்கிலத்தில் தட்டச்சு செய்யப்பட்டு உள்ளது என்றால் சரி தான். பொது அதிகார ஆவணத்தில் உள்ளவற்றை தானாக தெரிந்து கொள்ளும் அறிவு எனது சித்தப்பாவிற்கு இல்லை என்றால் சரி தான். அதனை தமிழில்

மொழி பெயர்த்து அவருக்கு படித்து காட்டியதாக அதில் கூறவில்லை என்றால் சரி தான். பொது அதிகார ஆவணத்தில் என்ன சொல்லப்பட்டுள்ளது என்று எனக்கு தெரியாது. நான் 1ம் பிரதிவாதியின் மகன் என்ற விவரத்தை ஏன் என்னுடைய நிரூபண வாக்கு மூலத்தில் சொல்லவில்லை என்றால் எனக்கும் எனது அப்பாவிற்கும் பேச்சு வார்த்தை இல்லாததாலும் நான் வாதிக்காக சாட்சி சொல்ல வந்ததுள்ளதாலும் அதனை சொல்ல வேண்டிய அவசியம் இல்லை. சிட்டேபாளையத்திற்கும் மேட்டுப்பாளையம் நகரத்திற்கும் எவ்வளவு தொலைவு இருக்கும் என்றால் 15 கி.மீ. இருக்கும். எனக்கு பொது அதிகார ஆவணம் எழுதிக்கொடுப்பதற்கு முன்னரே வாதி இந்த வழக்கில் சாட்சியம் அளித்துள்ளாரா என்றால் அளித்துள்ளார். அதன் பின்னர் சிட்டேபாளையத்தில் இருந்து 15.கி.மீ. தொலைவில் உள்ள மேட்டுப்பாளையம் வந்து தான் பொது அதிகார ஆவணத்தை எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் சரி தான். அதனால் வாதியால் மேட்டுப்பாளையம் வந்து நீதி மன்றத்தில் சாட்சியம் அளிக்க இயலாது என்று கூறுவது பொய் என்றால் சரி அல்ல. பொது அதிகார ஆவணத்திலும் எனது தகப்பனாரின் முகவரி தான் காட்டப்பட்டுள்ளது என்றால் 3 வீடுகளில் நான் குடியிருக்கும் 1 வீட்டின் முகவரி காட்டப்பட்டுள்ளது. ஒவ்வொரு வாய்தாவிற்கும் நான் திருப்பூரில் இருந்து தான் சாட்சி சொல்ல வரப் போகிறேனா என்றால் அங்கிருந்தும் வருவேன், சிட்டேபாளையத்திலிருந்தும் வருவேன்.

மேலே கண்ட சாட்சியின் வாக்குமூலம் திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் அவர் கூறியவாறு பதியப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டப்பட்டு அவரால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்ட பின்னர் அவரிடம் கையொப்பம் /கைரேகை பெறப்பட்டது.

Sd/- G.Gengaraj,

சார்பு நீதிபதி, மேட்டுப்பாளையம்.